# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

எண்.19–A ருக்மினி லட்சுமிபதி சாலை, ( டிட்கோ வளாகம்), எழும்பூர்,
சென்னை – 600 008
தொலைபேசி 28411376, 28411378, 28411379. தொலைநகல்: 28411377
email: tnercmail@gmal.com Website: www.tnerc.gov.in


## விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அறிவிப்பு
## (Notice for Expression of Interest)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (த.மி.ஒ.ஆ), 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் நோக்கங்களில் ஒன்றான நுகர்வோரின் நலன்களை ஊக்குவிப்பதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் தன்னுடைய ஆதரவின் கீழ் **“நுகர்வோர் கல்வி மற்றும் நலக்காப்புப் பிரிவு”** ஒன்றினை அமைப்பதற்கு விரும்புகிறது.

தகவலை ஒன்று திரட்டுதல், பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் பரப்புதல் போன்ற நோக்கங்களுக்காக பலம் வாய்ந்த அணியின் செயல் வினைஞர்களை உருவாக்கவும், மாநிலம் முழுவதுமுள்ள தனிப்பட்டவர்களுடனும் / அமைப்புகளுடனும் வலையமைப்பை ஏற்படுத்தவும் தங்களை ஆட்படுத்தி தலைமையேற்று நடத்த விருப்பம் உள்ள நுகர்வோர் அமைப்புக்களிடமிருந்து தங்களது விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அறிவிப்பை **2009 ஏப்ரல் 30ஆம் தேதிக்குள்** ஆணையத்திடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்படும் விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அறிவிப்பில் பின்வருவன இருத்தல் வேண்டும் :–

(i) முதல் ஆண்டிற்கான திட்டம்
(ii) நுகர்வோர் நலனைப் பற்றி விளம்பரப்படுத்துதல் மற்றும் ஊக்குவித்தல் ;
(iii) எதிர்பார்க்கப்படும் விளைவுகள்
(iv) அந்த ஆண்டிற்கான வரவு மற்றும் செலவு திட்ட விவர அறிக்கை.

சுருக்கப்பட்ட பட்டியலிலுள்ள நுகர்வோர் அமைப்புக்களை ஆணையத்தின் முன்பு வருகை தந்து விளக்குமாறு அழைப்பு விடுக்கப்படும். ஒப்பந்தம் செய்யப்பட்ட அமைப்பு, ***கருத்து வேறுபாடு இராத சுயநிதியுதவிக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்,*** ஆணையத்திடமிருந்து கொள்கை வழிகாட்டுதல்களைப் பெறுதல் வேண்டும். மாதாந்திர நிலை குறித்த அறிக்கையை கொண்டுவருதல், நுகர்வோர் மற்றும் மின் பகிர்வு உரிமம்தாரருக்கு உதவி செய்தல்; இரு மொழிகளிலுள்ள செய்தி இதழை வெளியிடுதல், ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கு வசதியாக மின் பகிர்வு உரிமம்தாரருடன் தொடர்பு ஏற்படுத்துதல் மற்றும் ஆணையத்தின் இணையதளமான **www.tnerc.gov.in** இல் இணையதள பக்கத்தினை உருவாக்குதல். முழு விவரங்களுக்கு **www.tnerc.gov.in (துணைப் பொருள் : நுகர்வோர் கல்வி மற்றும் நலக்காப்புப் பிரிவு )** இணையதளத்திலிருந்து தரவுறக்கம் (Download) செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்**
**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**